RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22253

OPEN ACCESS

# நட சிவகுமார் கவிதைகளில் விளிம்புநிலை மக்கள்

தே. மேரி மெல்பா ரோஸ் [அ, *], சி. கணேஷ்

[அ] தமிழ் ஆய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) நெய்யூர், தமிழ்நாடு, இந்தியா.

# Downtrodden People in Nata Siva Kumar's Poems

**D. Mary Melba Rose [a, *], S. Ganesh [a]**

[a] Department of Tamil, Lekshmipuram Arts and Science College, (Affliated to Manonmaniam Sundaranar University) Neyyoor, Tamilnadu, India.

* Corresponding Author: melba94453441 49@gmail.com

Received: 18-01-2022
Revised: 05-04-2022
Accepted: 13-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

The plight of the downtrodden people is discussed in the contemporary poetry of Kanyakumari District under the title The subattern condition in Nata Siva Kumar's Poems. From the year of India's Independence to the present many poets have emerged in Kanyakumari District and have written Poems from various new perspectives. In that line many poets like Nata Siva Kumar, Pazhangudi Bharathi and Dr. Selva Kumar have become famous by writing many poems. Through this research, the natural resources of Kanyakumari district, the culture of the people and the daily life of the downtrodden people are discussed.

**Keywords:** Downtrodden People, Culture, Life Skills, Washerman, Untouchability

## முன்னுரை

"உள்ளத்து உள்ளது கவிதை
உண்மை தெரிந்துரைப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என கவிதைக்குக் கவிதையிலேயே இலக்கணம் தந்தவர் கவிமணி-கவிதைகள்

சமகால சமுதாயத்திலுள்ள சமூக அவலங்களை தோலுரிப்பதாக எழுதப்படும். அவ்வகையில் குமரி மாவட்டத்திலுள்ள சமகால கவிஞர்களின் கவிதைப் போக்குகள், குறிப்பாக நட சிவகுமார் அவர்களின் கவிதைப் போக்குகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நட சிவகுமார்

புரதவண்ணார் சமூகத்தைச் சேர்ந்த நடசிவகுமாரின் கவிதைகளிலிருந்தும் வேறுபடும் சமூகக் கண்ணோட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. அதுவரையில் பொத்தம் பொதுவாக தலித்துகளின் பொதுப்பிரச்சனைகளாகப் பேசிவந்த தமிழ்கவிதையுலகில் முதன்முதலாக வேறுபட்டு அடித்தள மக்களின் தனி அடையாளங்களை எழுதிய கவிஞர், நட சிவகுமார் ஆவார்.

புரதவண்ணார் சமூகத்தின் தனித்த இயல்பான தொழில் முறை வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து இரண்டறக்கலந்த நட சிவகுமார், நம்பூதிரி பிராமணர்களுக்கு, செட்டியார்களுக்கு, வலியவீட்டு ஏமான் என்ற நாயகர்களுக்குத் துணிவெளுத்துக் கொடுக்கும் வாழ்வியலைக் கவிதையாகக் கொடுத்துள்ளார். வெள்ளாவி அடுப்போடும், அழுக்குத்துணிகளோடும் அடித்தளநிலை வாழ்க்கையைப் பிரதிபலித்த நட சிவகுமாரின் கவிதைகள் சடங்கு சார்ந்த நம்பிக்கைகளும், மந்திரமும், நாட்டுவைத்தியமும் கலந்த பண்பாட்டு விழுமியங்களைப் பேசுகின்றன.

## அழுக்குத்துணி மூட்டையும், வெள்ளாவி அடுப்பும்

தான் வாழ்ந்த வாழ்க்கையை அடித்தளநிலையின் குரலாக ஒலித்த சிவகுமார், அதன் தனித்த தன்மைகளையும் பேசியபோது பொதுப்பிரச்னைகளையும் இவரது கவிதைகள் முன்வைக்கவில்லை என்றொரு குற்றசாட்டு எழுந்தது. அதற்குப்பதில் சொன்ன நட சிவகுமார், "நான் சேராங்கொட்டை மையிலான துணிகளுக்குள் வாழ்ந்தவன். படுவர்மம், தொடுவர்மம் பேசிய வைத்தியனின் விலா எலும்புகளுக்குள் இருந்து வெளிவந்தவன். எனது பச்சை சதையைச் சுவைத்து துப்பிக் கொண்டே கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். எனது வாழ்க்கையை வேண்டுமானால் நீ வாசித்துவிட்டோ, வாழ்ந்துவிட்டோ பிரதி எடுத்து தப்பித்துக் கொள். உனது வாழ்க்கையை பிரதி எடுக்கக் கட்டாயப்படுத்தாதே" என்றார்.

இவற்றிலிருந்து அடித்தளமாகிப்போன வாழ்க்கை வாழ்ந்து அதைக் கவிதையாகவும் மாற்றியவர் நட சிவகுமார் என்பதை அறியலாம். இவர் தலித் கவிஞராக அறியப்பட்டாலும், அடித்தள நிலை மக்களின் மந்திரமும், வைத்தியமுறையும் அவரை இன்னொரு திசையில் கொண்டு செல்கிறது. இவரது கவிதைகளில் வெளிப்படும் அடித்தளநிலைத் தன்மைகளாகக் கீழ்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

- அடித்தளத்தின் வழிபாடு
- வீடற்ற தன்மை
- தொழில் வாழ்க்கையும், மந்திரச் சடங்கும்
- உடல் ஊனம்
- அரச, மத பயங்கரவாதம்
- தீண்டாமைக் கொடுமை

## அடித்தளத்தின் வழிபாடு

அடித்தளநிலை மக்களின் வழிபாடு ஒருமதம் அல்லது குலம் சாராதது. எல்லாவற்றையும் வணங்குவது அதன் இயல்பான குணமாகும். தன் சாதி சார்ந்த அடையாளம் கொண்ட தெய்வங்கள் இருக்கும்போது இன்னொரு மதவழிபாடு செய்வதை நட சிவகுமாரின் கவிதைகளில் காணலாம். அடித்தளநிலை மக்களின் வழிபாடு ஒருவகையில் முன்னோருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பழிவாங்குதலாக உள்ளது. 'வரைபடத்தில் தென்திருவாங்கூர்' என்னும் கவிதையில்,

"உடைந்த ஆற்றின் கரை

தெய்வத்தின் அல்லது பிசாசின் கோபமாம்

உடைப்பின் மேல்தள்ளி மண்ணைமூடி பலிகொடுத்தாய்

எழுதப்பட்ட செப்புத்தகடுகள் பொருத்தி கைக்குழந்தைகளை

அரண்மனை நான்கு மூலைகளில் புதைத்தாய்

உன் புரோகித சடங்கால்

எருமை மாட்டுக்கு இணையாகப் பூட்டி கர்ப்பிணியை

வயலில் உழவைத்து கதறக்கதறப் பலிகொடுத்தாய்

இசக்கியாய் சுடலையாய் வருகிறோம்

பார்க்கவேண்டாமா பச்சை ரத்தத்தின் ருசியை நாங்கள்"3

பழிவாங்கும் அடித்தளத்தின் கடவுளைப் பேசும் நட சிவகுமார் 'காளிப்பெரும்புலையனும், மாபாவி சுடலையும்' கவிதையில் அவ்வாறு பழிவாங்கப்பட்ட நம்பூதிரி பிராமணன் செய்யப்படுவதையும் கூறுகிறார். புலைமாடனாக வழிபாடு

"பத்மநாபசுவாமி பூசைக்கு

செரட்டையில் நெருப்புக்கொடுத்த புலையன்மகளை

புணரத்துடித்தான் நம்பூதிரி

பூணூல் களைந்து தோல்செருப்பு போடாமல் வாவென

புலையன் கட்டளைவிட்டு கூத்தாடி முடித்தான்

கிணற்றில் தள்ளிவிட்டு கூத்தாடி முடித்தான்

காளிப்பெரும்புலையன்"4

என்ற வரிகளில் காணலாம். அடித்தளத்தின் வழிபாடு எப்படி இருக்கும் என்று தான் சார்ந்த தொழிலோடு தொடர்புபடுத்தி 'அதர்வணதேசம்' என்ற கவிதையில் கூறுகிறார்.

"வசியத்திற்குப் பாலில்

மோகனத்திற்குத் துணிதுவைக்கும் கல்லுக்கடியில்

உச்சாடனத்திற்கு காளிதுர்க்கை கோயில்

வித்து வேஷத்துக்குச் சுடுகாடு

பேதனத்துக்குப் பிரேதம் வேரும்தானல்

எங்கள் அதர்வணம்"5

என்ற வரிகளில் பெருந்தெய்வ வழிபாட்டைக் குலைத்து அதே இடத்தில் அடித்தளத்தின் வழிபாட்டைக் கூறியதாகும்.

## வீடற்ற தன்மை

அடித்தளத்தில் தன்மைகளில் ஒன்று சொந்த வீடு இல்லாததாகும். நட சிவகுமாரின் பல கவிதைகளில் வீடற்றத்தன்மை பேசப்படுகிறது. சொந்தவீடு கட்டும் முயற்சி தோல்வியடைந்த வரலாற்றைத் கூறுகிறது. 'வீடு' எனும் கவிதை.

"அடுக்கி வைக்கப்பட்ட செங்கல்கள்

குவித்துப் போட்டிருக்கும் மணல்கள்

இவைகளைக் கடக்கையில்

சில ஆண்டுகளாக கடன் வாங்கியும்

மனைவியின் நகையைப் பத்திரமாக வங்கியில் வைத்தும்

இன்றும் கட்டி முடிக்காத வீடு

மனத்தைக் கடந்து போகிறது

நேற்றிரவு கனவிலும் வந்தது

கட்டிமுடிக்காத வீடு"6

என்ற கவிதையில் வெளிப்படும் ஆதங்கம் வீடற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகும். 'கிணறு' என்ற கவிதையில் பூனை செத்து மூன்று நாளாய்க்கிடக்கும் தண்ணீரைப் பாத்திரம் கழுவ, குளிக்க, இன்ன பிறவுக்கும் பயன்படுத்தும் அவலம் கூறப்படுகிறது.

"காக்கா கொண்டு போடும் மீன்முள்ளு, இறைச்சிமுள்ளு

இந்த கண்றாவியெல்லாம் கிணற்றில்தான் விழும்

இவ்வளவு இருந்தும்

தண்ணி சௌரியத்துக்காகத்தான்

இந்த வீடகட்டியழ வேண்டியிருக்குண்ணு

அம்மா சொல்லுவா அடிக்கடி

மயிரு வாழ்க்கையை மனசிலாக்காம."7

என்ற கவிதை சொந்தவீடின்றி வாடகை வீடுகளிலும், ஒண்டிக்குடித்தனங்களிலும் வாழும் மனிதர்களின் அவலத்தைக் கூறுவதை இங்கு காணலாம்.

## தொழில் வாழ்க்கையும், மந்திரச் சடங்கும்

தனது தொழில்சார்ந்த வாழ்க்கையைப் பலகவிதைகளில் பதிவு செய்யும் நட சிவகுமார் அதனோடு மந்திரச்சடங்குகளையும் இணைக்கிறார்.

தொழில் வாழ்க்கையைக் கூறும் என் கவிதையில்,

"செரட்டை கனலுள்ள இஸ்திரிப்பெட்டி

துணிகளில் குறியிடும் சேராங்கொட்டை

அழுக்குள்ள இழுத்தோடும் குழித்துறை ஆத்து தண்ணி

கழுதை முதுகிலுள்ள துணிக்கட்டுகளை அவித்து

ஆவி வரவைக்கும் வெள்ளாவி அடுப்பு"8

என்பதுடன் அடங்கவில்லை, 'பாட்டிகளைப் பற்றி சில தகவல்கள்' கவிதையில் அதிலுள்ள பிரச்சனைகளையும் சொல்கிறார்.

"பண்டிகை நாளா சாப்பாட்டிற்குக் கவலையில்லை

சந்தோசத்துடன் விடியற்காலையில்

வீட்டின் பின்புறமா முன்பு துணிவெளுத்த வீட்டில்

நாகரிகப் பிச்சை"9

என்று சோகத்தைப் பதிவு செய்கிறார். 'பூநீரு' எனப்படும் உவர்மண்ணைத் துணிதுவைக்க எடுக்கச் செல்லும் மந்திரச் சடங்கு பற்றிக் கூறுகிறது 'ரசவாதம்' கவிதை.

"வண்ணானைத் தவிர வேற எந்த சாதிக்காரனுக்கும்

உவர்மண் எடுக்க முடியாதுண்ணு

தம்பி ஒருநாளு படிச்சிட்டு இருந்தபோது

காணிச்சு தந்தான்"10

என்ற வரிகளிலிருந்து இதனை அறியலாம்.

## உடல் ஊனம்

தன் உடம்பின் ஊனத்தை கவிதையாக்கி இருக்கும் நட சிவகுமார் அடித்தளத்தின் எழுத்தைத் தொடுகிறார். தன்னை அறிமுகப்படுத்தும் கவிதை 'மிச்சமிருப்பது'.

"இதற்கு மேலும்

இடதுகாலை அடிக்கடிபார்த்து

மனசுக்குள் அழுபவனாக"11

என்று தன்னை உடல் ஊனத்தோடு அறிமுகம் செய்கிறார். 'கால்கள்' என்றொரு தனிக்கவிதையே எழுதி இருக்கிறார். ஆற்று வெள்ளத்தில் நின்று அழுக்குத் துணிகளைத் துவைத்துப் பக்கவாதம் பிடித்த கால்களோடு தந்தை படுத்துக்கிடக்கிறார்.

"இந்த கால்களைப் பற்றி ஒருவரிக் குறிப்பு கூட

எழுதாம ஒரு வேளை நான் செத்துட்டா

நாளைக்குள்ள பயலுவ

காறித்துப்புவானுவ எனக்க கவிதைய"12

என்பதிலிருந்து ஊனத்தைக் கவிதையாக்குவதின் முக்கியத்துவம் குறித்து அறியலாம். தனது உடல் ஊனம் கூட தொழில் வழி கிடைத்த சோகமாகப் பதிவு செய்கிறார்.

## அரச, மத பயங்கரவாதம்

நட சிவகுமாரின் கவிதை வெளிப்படுத்தும் மற்றொரு சிறப்பம்சம் அரச, மத பயங்கரவாதத்தை எதிர்ப்பதும், அவற்றைச் சுட்டுவதாகும். 'வரைபடத்தில் தென் திருவிதாங்கூர்' என்ற கவிதையில் மார்த்தாண்டவர்மாவால் நிறைவேற்றப்பட்ட கழுமரமேற்றப்படும் தண்டனை விவரிக்கப்பட்டுள்ளது.

"மனித உருவ ஆறடி நீளமுள்ள

கழுமரக் கூண்டு கவசத்தில்தான்

அப்பாவி குற்றவாளிகளையெல்லாம்

பசியால் கதறக் கதற

பருந்துகளும், காகங்களும் கொத்தித்தின்ன

அந்தரத்தில் தொங்கவிடுவார்களாம்

கண்முன்னே வெவ்வேறு வடிவங்களில்

அது மார்த்தாண்டவர்மா காலம்"13

என்ற வரிகளில் வெளிப்படும் அதே குரூரத்தை மதப்பயங்கரவாத எதிர்ப்புக் கவிதையிலும் நட சிவகுமார் சுட்டிக்காட்டுகிறார்.

## தீண்டாமைக் கொடுமை

ஆற்றில், குளத்தில் நின்று துணிதுவைக்கும் வண்ணான் ஊர்குளத்தில் இறங்கிக் குளிக்கமுடியாத கொடுமையைக் கூறுகிறது. அந்தக்காலத்தில் அரசர்கள் மட்டும் குளிக்கமுடிந்த

குளங்களில் குமரி மாவட்டம் தனியான பிறகு சுதந்திரமாகக் குளிக்கலாம். 'தாத்தா சொன்னது' கவிதையில்,

"இருந்தாலும் நாங்க எல்லாம் குளிச்சாக்கா

ஊருல உள்ள ஒண்ணு இரண்டு கிழட்டுக் கழுதை

ஒரு சைசா பாக்கானுவ கண்ணுல இடி விழதுக்கு"14

என்கிறார்.

பெயருடன் இந்த வண்ணான் என்னும் சாதி அடையாளம் தன்னையும், தனது மகனையும் விட்டு வைக்கவில்லை என்று கவிதைகளில் பதிவு செய்கிறார். 'பெயர்' என்ற கவிதையில்,

"ஊரில் என் பெயர் வண்ணான்

அம்மா அப்பா இட்ட பெயர் சிவகுமார்

குடும்ப தொழில் வைத்தியம், மாந்திரீகம், துணிவெளுப்பு

மூலிகை சேகரிக்க உதவும்

பறையர்குல வள்ளிப்பாட்டி சொந்தக்காரி

காட, தேவாங்கு, கருங்குரங்கு, பச்சோந்தி, உடும்பு

வேம்பித்தேன் மருந்துக்கும், மாந்திரீகத்திற்கும்

காணிக்காரன் சொந்தக்காரன்

இரும்பை உருக்கி பஞ்சலோக தகடுசெய்ய

ஆசாரி சொந்தக்காரன்

எந்த மருந்தையும் சுத்தி பண்ண

கள்ளு சாராயம் அக்கானி கருப்பட்டியெல்லாம் தரும்

சாணான் சொந்தக்காரன்

விராலி, நெத்திலி மீனெல்லாம் பந்தயத்திற்கு முக்கியம்

முக்குவனும் சொந்தக்காரன்

மருந்துச்சட்டிப் பானைக்கு மண்குயவன்

எந்த மருந்தையும் சுத்தி செய்ய சுண்ணாம்பு பரவன்

மோர் வெண்ணெய் மருந்துக்குக் கோனான்

என் சொந்தக்கார்கள்

அப்பா அம்மா இட்ட பெயர் சிவகுமார்

ஊரில் என் பெயர் வண்ணான்"15

என்ற வரிகளில் அடையாளம் இழக்காத தன்மையைச் சாதிய சமுதாயம் தன் மேல் சுமத்துவத்தைக் கூறுகிறார். தனது மகன் மீதும் இது தொடர்கிறது என்பதை,

"அன்று பிரதோஷத்தன்று

சரியாக மாலை 4.32 மணிக்கு

கவிசாகர் பிறந்தான்

அப்பா தாத்தாவானார்

மகன் வண்ணான் ஆனான்"16

என்ற வரிகளில் தீண்டாமை வெளிப்படுவதைக் காணலாம்.

நட சிவகுமாரின் கவிதைகள் குறித்துப் பேசும் முஜீப் ரகுமான், "நட சிவகுமாரின் கவிதைகளுக்கான அழகியல் என்பது எதிர் அழகியல் மந்திரமல்ல, வேறு வகையில் சொல்லப்போனால் இலக்கியத்திற்கும், சமூகத்திற்கும் இடையே நடக்கும் போராட்டமே இலக்கியம் என்பதாகும் "17 என்கிறார். தொழில்சார்ந்தும், அதன் வாயிலாக சமூகம் சார்ந்தும் நிகழும் இந்தப் போராட்டத்தில் தன்னைத் தற்காக்க மூதாதையரின் வைத்தியம், மாந்திரீகம் இவற்றை இவர் கவிதைவாயிலாக ஆயுதமாக வெளிப்படுத்துகிறார்.

## முடிவுரை

வண்ணார் சமுதாயத்திற்குச் சமூகத்தில் இருந்த அவலங்களும், இழுக்குகளும் இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளன. இந்நிலையைச் சமூகத்திற்கு எடுத்துச் சொன்ன நட சிவகுமார் பங்களிப்பு பாராட்டத்தக்கது. இவரைப் போன்று பல கவிஞர்கள் குமரி மாவட்டத்தில் உள்ளனர், அவர்களது படைப்புகளையும் இனங்கண்டு வெளிக் கொணர்ந்தால் புது விடியல் புலப்படும்.

## References

Mujib Rahman, Parvayil Nata Siva Kumar, (Page – 51)
Nata Siva Kumar, Thapurattiyin Pariyankam, (Page – 28)
Nata Siva Kumar, Thapurattiyin Pariyankam, (Page – 87)
Nata Siva Kumar, Thapurattiyin Pariyankam, (Page – 87)
Nata Siva Kumar, Uvar Mann, (Page – 29)
Nata Siva Kumar, Uvar Mann, (Page – 3)
Nata Siva Kumar, Uvar Mann, (Page – 85)
Nata Siva Kumar, Vetti Muripu Kalam, (Page – 27)
Nata Siva Kumar, Vetti Muripu Kalam, (Page – 66)
Nata Siva Kumar, Vetti Muripu Kalam, (Page – 81)

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License